விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம். விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், T.பனப்பாக்கம் கிராமம் மற்றும் தொரவி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : ஊராட்சி மன்ற தலைவர் திரு. V. சங்கர்

தீர்மானம் எண் : 237/2024 **நாள் : 06/03/2024**

பொருள் : உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் - விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் - தொரவி ஊராட்சி மற்றும் கிராமம் - ச.எண். 49/2, 49/3C இடத்தில் 1.21 ஏக்கர் (அ) 4900.00 ச.மீ - பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அமர்ந்த வாழியம்மன் நகர் விரிவாக்கம் செய்திட குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் - வழங்குதல் குறித்து

பார்வை: 1) மனுதாரர் திரு.N.செல்வராஜ், விழுப்புரம் அவர்களின் விண்ணப்பம் நாள்: 16.2.2024

2) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017

3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No. IXH7DXQR / 2024 TCP நாள்: 16.02.2024

4) சார்பதிவாளர், பதிவுத்துறை, விழுப்புரம் எண் 2 சார்பதிவாளர் அலுவலகம், ஆவண எண்.1194/2024 நாள்: 09.02.2023

5) நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது. STATE BANK OF INDIA Challan No. 20240215002910 மற்றும் கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது. STATE BANK OF INDIA AC No. 11190890900

உத்திரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம் - விக்கிரவாண்டி வட்டம் - விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் - தொரவி ஊராட்சி மற்றும் கிராமம் - ச.எண். 49/2 & 49/3C இடத்தில் 1.21 ஏக்கர் (அ) 4990.00 ச.மீ - பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அமர்ந்த வாழியம்மன் நகர் விரிவாக்கம் செய்திட குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 3- ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)-ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (4)-ல் சுட்டியபடி சாலை, மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானபத்திர ஆவண எண் .1994/2024 நாள் : 09.02.2024 - ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை (3)-ல் சுட்டியபடி பார்வை (5)-ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நில பயன் மாற்று கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனைபிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்திற்கு மேற்படி தொரவி ஊராட்சி மன்ற தீர்மான எண். 237/2024 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும்,தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்பிவைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1) மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொது துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.
2) மனைப்பிரிவு வரைப்படத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தபட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3) நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
4) சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒன்று மரம் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
5) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமாலும் ரத்து செய்யப்படும்

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொரவி ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண். 49/2 & 49/3C இடத்தில் 1.21 ஏக்கர் (அ) 4990.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள அமர்ந்த வாழியம்மன் நகர் விரிவாக்கம் செய்திட தொரவி ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது

இணைப்பு

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

திரு .V.சங்கர்,

ஊராட்சி மன்ற தலைவர்,

தொரவி ஊராட்சி.

ஊராட்சி மன்ற தலைவர்
தொரவி ஊராட்சி
விக்கிரவாண்டி ஒன்றியம்.

பெறுநர்

திரு. திரு.N.செல்வராஜ் ,

எண்.36/5, தனலட்சுமி கார்டன்,

விழுப்புரம் – 605 602.

நகர் ஊரமைப்புத்துறை – விழுப்புரம் மாவட்டம்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், தொரவி ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்கள்: **49/2 & 49/3C** -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள கோப்பு எண்:**IXH7DXQR/2024/TCP**
அளவு: 1 அங்குலம் 66 அடி (1:800)

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	**1.21** ஏக்கர் (**4900** ச. மீ)
ஒதுக்கிய மனைகள்	:	**26**
மனைப்பிரிவு எல்லை		
நிலையிலுள்ள சாலை		

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவு சாலைகள் (ம) முனைமுடக்குகள்: **1458.30** ச. மீ		
உள்ளாட்சி	: **48.54** ச. மீ (**1.41 %**)	
மின்வாரியம்	: **51.24** ச. மீ (**1.48 %**)	
பூங்கா	: **345.80** ச. மீ (**10.04 %**)	

கட்டிட வரம்பு
7.20மீ. முதல் 9.0 மீ. சாலை வரை 1.5மீ. விடப்பட வேண்டும்.
9.0 மீட்டருக்கு மேல் 18.0 மீ. சாலை வரை 3.0மீ. விடப்பட வேண்டும்.

முனை முடக்கு
12.0மீ. அகல சாலை வரை 1.5மீ. x 1.5மீ. விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்ததையாலும் நில ஆர்ஜிதம்செய்யப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் பட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்படவில்லையென்று உறுதி செய்து கொள்ளவேண்டும் .

2. அரசானை எண் 71, ஊ. வ துறை (ம) நாள் 16. 06. 2003 -ன் படி பூங்கா (ம) சாலை ஒதுக்கீடுகளை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்கப்பட வேண்டும் என்றும் நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழு பொறுப்பு என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது .

3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படகூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்புஅலுவலர் அவர்களால் ரத்து செய்யபடும்.

4. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கபடும் மனைப்பிரிவில் மனைகள் வாங்கும் ஒவ்வொருமனுதாருக்கும் ஒப்புதல் அளிக்கபட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும் .

5. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்பந்தப்பட்ட இடத்தில் 5' X 5' என்ற அளவிற்கு குறையாமல் காங்கீரீட் தகவல் பலகையில் நிரந்தரமாக வரைந்து வைக்கப்பட வேண்டும்.

6. அரசானை எண்: 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04. 02. 2019 -ன் படியான தமிழ்நாடு ஒருங்கிணைந்த (ம) கட்டிட விதிகளின் படி பொது ஒதுக்கீட்டிற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


7. The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8. நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூல தீர்த்துக் கோள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

9. பிரஸ்தாப மனைப்பிரிவில் நீர்நிலைகள் ஏதும் இல்லை என மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ம. வ / ந. ஊ. உ. இ. (வி. மா) எண்:24/2024 (இணையதள ஒப்புதல்)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விழுப்புரம் மாவட்டம்



அளவர்/உதவி வரைவாளர்

Signed by: Assistant Director
Location: Villupuram
Date: 2024.02.16 17:[illegible]:32
Signature Valid

வரைவாளர் நிலை – III

மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை – II